# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

India's National Spiritual Newspaper

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII | YEAR OF OUR LORD JESUS CHRIST, APRIL 2022 | No. 4


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### 1 யோவான் 4:7-14

7. பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.

8. அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.

9. தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

10. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

11. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

12. தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

13. அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.

14. பிதாவானவர் குமாரனை உலக ரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்.

# இயேசுவின் சிலுவை!


சகோ. எம். பால்ராஜ்


**"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 1:18).**

சிலுவை சாபத்திற்கான அடையாளம் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயிர்த்தபின், அது ஒருபோதும் சாபத்தின் அடையாளம் அல்ல; இரட்சிப்புக்கும், அன்பிற்குமான அடையாளம். இன்றைக்கு கோடிக்கணக்கான ஆண்களும் பெண்களும் சிலுவையை தங்கள் கழுத்தில் அன்பிற்கும், ஆசீர்வாதத்திற்கும் அடையாளமாக அணிந்து கொள்கிறார்கள். வேதம் சொல்கிறது, "**மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் ...**" (கலாத்தியர் 3:13). ஆனால், கர்த்தரோ சிலுவையை இரட்சிப்புக்கும், அன்பிற்கும் அடையாளமாக ஆக்கி விட்டார்! எப்படியும் சிலுவையில் மரிக்க வேண்டுமென்று அதை இயேசு தெரிந்துகொள்ளவில்லை; ஆனால், யூதர்களும், ஆசாரியர்களும் இயேசுவை ஒரு குற்றவாளியெனத் தீர்த்து இந்த தண்டனையினை அவர்மேல் திணித்தார்கள்.

## உலகம் எப்படிப் பார்க்கிறது ?

இயேசு சிலுவையில் மரித்ததை உலகம் எவ்வாறு பார்க்கிறது? 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலேய கவிஞரும், தத்துவஞானியுமான டி.எஸ். இலியட் (T.S. Eliot) என்பவர், "சிலுவை உயரிய அர்ப்பணிப்பிற்கான அடையாளம் (Cross is the symbol of supreme sacrifice); சிலுவை உலகத்திற்கு ஓர் அடையாளம்! சிலுவை எல்லாக் காலத்திற்கும் விட்டுச்சென்றுள்ள மரபு (legacy)" என்றார். இந்தியாவின் தலைசிறந்த தத்துவஞானி, டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், "சிலுவை துக்கத்திற்கும், பாடுகளுக்கும் அடையாளம் (symbol of sorrow and suffering)" என்றார். 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த கவிஞரும் தத்துவ ஞானியுமான தாமஸ் J. கெம்பிஸ் என்பவர், "சிலுவை இரட்சிப்பு, சிலுவை வாழ்வு, நமது எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, பரலோகத்தின் நன்மையானதைத் தருகிறது, நன்மைக்கு உச்சம், மேலும் பரிசுத்த வாழ்வின் நிறைவு" என்றார். பவுல் அப்போஸ்தலனைப் பொறுத்தமட்டில், "சிலுவை, தேவனின் வல்லமை" என்கிறார்.

சிலுவையின் உபதேசம் மதிகேடு (foolishness) என்று உலக மனிதர் கருதுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட நமக்கோ, அது தேவ பெலனாயிருக்கிறது. சிலுவையைக் குறித்து தியானிப்பதால் நாம் புத்துணர்வு அடைகிறோம்!

## சிலுவை மரணத்தின் கொடூரம்!

தாம் சிலுவையில் மரிக்கப்போவதை இயேசு முன்கூட்டியே அறிந்திருந்தார், ஏனெனில், குற்றவாளிகளுக்கு அதிகபட்சத் தண்டனையாக சிலுவை மரணம்தான் அந்நாட்களில் கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவை ஒரு கடினமான குற்றவாளியாக பாரம்பரிய யூதர்களும், ஆசாரியர்களும் கருதினார்கள். இயேசு, நியாயப்பிரமாணத்தை மீறியவராகவும் அவர்களின் பாரம்பரிய பழக்கவழக்கத்திற்கு ஒரு அச்சுறுத்தலாகவும் இருப்பதாக அவர்கள் கண்டனர். ரோமர்களைப் பொறுத்தமட்டில் யூதர்களைத் தொடர்ந்து ஆளுகை செய்திட இது அவர்களைப் பிரியப்படுத்தும் கருவியாகக் கண்டனர். தமது மரணத்தைக் குறித்து இயேசு தமது சீடர்களுக்குச் சொல்லியிருந்தார். ஆனால், அவர்களோ, அதனைப் பெரிதாக அப்போது


தொடர்ச்சி 4–ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



"... நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் ..."
– யோவான் 11:40



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Bro. M. Paulraj, M.A., B.Ed.
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.



**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நமது ஆண்டவரும், உயிர்த்தெழுந்த உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

உங்கள் தொடர்ந்த ஜெபங்களாலும், ஒத்தாசைகளாலும் நம்முடைய ஊழியங்கள் – குறிப்பாக ஜெப ஊழியங்கள், 16 மொழிகளில் பத்திரிகைகள், சபை ஊழியங்கள், வேதாகமக் கல்லூரி, காணொலிமூலம் (Online - Hindi) வேதாகமக் கல்லூரி, தபால் மூலம் வேதாகமக் கல்வி, சுவிசேஷ அச்சகம், சிறுவர் ஊழியங்கள், மருத்துவமனை ஊழியங்கள், கிராம உயர்நிலைப்பள்ளி யாவும் சிறப்புடன் நடைபெறுகின்றன. இதற்காகக் கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறோம்.

சமீபத்தில் நம் தேசங்களில் சுவிசேஷப் பணிகளுக்கும், தேவ ஊழியர்களுக்கும் பலவிதங்களில் இடையூறுகளும் இன்னல்களும் விளைவிக்கப்படுகின்றன. இவற்றை உற்றுக் கவனிக்கும்போது, இடையூறுகளுக்குப் பயன்படும் மக்களில் பெரும்பான்மையோர் முன்காலங்களில் கிறிஸ்தவ சபைகளால் உதவி பெற்றவர்களும், கிறிஸ்தவப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கல்வி கற்றவர்களாகவும் இருக்கின்றனர். பிரபல கிறிஸ்தவப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் சுட்டிக்காட்டி, அங்குதான் நான் படித்தேன் என்று சொல்வதில் அதிக முனைப்பு காட்டிப் பெருமிதம் கொள்ளுகின்றனர். அதே வேளையில் கிறிஸ்தவ சேவை நிறுவனங்களையும், சபைகளையும் வெறுக்கின்றனர்.

இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், நம் தேவ ஊழியர்களும் கல்வியாளர்களும் யாரால் தாங்கள் இந்த மேன்மையான ஊழிய ஸ்தலத்திற்கு கொண்டுவரப்பட்டார்கள் என்பதையும், எதற்காக கொண்டுவரப்பட்டார்கள் என்பதையும், எப்படி கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதையும் சிந்திக்காமல் செயல்படுவதே.

உதாரணமாக, நான் ஓர் அரசாங்க உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது அங்கு திரு. தாமஸ் என்ற கத்தோலிக்கத் திருச்சபை அங்கத்தினரும், திரு. ஜான்சன் என்ற வேறு ஒரு கிறிஸ்தவத் திருச்சபையின் அங்கத்தினரும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். அவர்கள் இருவருடைய கற்பிக்கும் முறைகள், ஈடுபாடு, திறமை மற்றும் அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் யாவும் உன்னதமானவைகளாக இருந்தன. இதனால் அனேக மாணவர்கள் நன்னடத்தையிலும், தேவ பயத்திலும் உருவாக்கப்பட்டனர். அவர்களில் நானும் ஒருவன்.

மறுபக்கம் பார்க்கும்போது கிறிஸ்தவ பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படித்தவர்களும், ஏதோ ஒரு உதவி பெறுவதற்காக கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் சென்று வந்தவர்களும், கிறிஸ்தவ மருத்துவமனைகளின் சிகிச்சைகளின் மூலம் மறுவாழ்வு பெற்றவர்களும் இன்று தேவ வசனத்தையும், ஊழியர்களையும் வெறுக்கவும், எதிர்க்கவும் முன் வருகிறார்கள்! இது கிறிஸ்தவ மக்கள், ஊழியர்கள் மற்றும் கல்வியாளர்களுடைய குறைவுதான்.

இனிமேலாவது, நம்மிடம் வரும் மக்களையும், மாணவர்களையும் நம் ஜெப வாழ்க்கையாலும், ஞானமுள்ள செயல்களாலும், நற்காரியங்களையும், தேவபயத்தையும் உட்புகுத்த தேவ ஊழியர்களும், பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வாழ்க்கையின் அனைத்து பகுதிகளிலும் பிரதிபலிக்க உறுதியுடன் முன்வரவேண்டும். அப்படியானால் மட்டுமே ஒரு நல்ல எதிர்காலத்தையும், உண்மையான விடுதலையையும், அடிமைத்தனத்தினின்று விடுதலையையும் எதிர்பார்க்க முடியும்.


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" – (*யோவான் 8:32*).

**அழைப்பின் எதிரொலி** *குடும்பத்தினர் யாவரும் இக்காரியத்தை உட்கொண்டு சரியான ஜெபங்களை ஏறெடுப்போமாக!*

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

# நெகேமியா வேதாகமக் கல்லூரி செய்தி

கடந்த காலத்தில் கொரோனா தொற்று வியாதியினிமித்தம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் நமது ஊழியங்கள் வெகுவாய் பாதிக்கப்பட்டது. கர்த்தருடைய கிருபையால் எல்லாக் கடினமான சூழ்நிலைகளையும் மேற்கொண்டு வருகிறோம். கர்த்தருக்கே மகிமை.

இந்த சூழ்நிலையில் நம் நெகேமியா வேதாகமக் கல்லூரி சார்ந்திருக்கும் Asia Theological Association (ATA)-ன் ஒழுங்கின்படி (Registered Candidate for Membership), நம் வேதாகமக் கல்லூரி மாணவர்களின் அனுதினத் தேவைக்காக ஒரு முழு அளவிலான (குறைந்த பட்சம் 8,000 புத்தகங்கள் அடங்கிய) ஒரு நூலகம் அமைக்கப்பட வேண்டும். நம்மிடம் சுமார் 2,000 புத்தகங்கள் ஏற்கனவே உள்ளன. எஞ்சிய புத்தகங்களை வாங்கவும், அடுக்கி வைப்பதற்கான அலமாரிகள் வாங்கவும் நம்மிடம் பணவசதி இல்லாததால், நாம் இதற்காக மிகவும் பாரத்துடன் நீண்ட நாட்களாக ஜெபித்து வந்தோம்.

இதன் விளைவாக நம்முடைய நண்பர் ஒருவர், நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கு சில லட்சம் ரூபாய்கள் விலை பெறுமதியான சுமார் 4,000 புத்தகங்களை இலவசமாகத் தந்து உதவினார். அவற்றை தேவதயவால் மிகவும் பிரயாசப்பட்டு வாங்கிய புதிய 18 இரும்பு அலமாரிகளில் அடுக்கி பராமரிக்கிறோம்.



இப்போது இப்புத்தகங்களை முறைப்படி கணினியில் (computer) பதிவேற்றம் செய்து பராமரிக்க வேண்டியதும், மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதும் கட்டாயத்தேவையாகும். மாதந்தோறும் நம் தேவைகளான போதகர் மற்றும் ஊழியர் உதவிகள், நெகேமியா வேதாகமக் கல்லூரி ஆசிரியர் உதவிகள், காகிதம், அச்சகப் பொருட்கள், பிரயாணங்கள் போன்றவற்றிற்கான செலவுகளை பிறரிடம் கூறாமல் மிகுந்தப் பிரயாசத்துடன் சமாளித்து வருகிறோம். இந்நிலையில் நமது நெகேமியா வேதாகமக் கல்லூரி நூலகப் புத்தகங்களை கணினிமயமாக்க (computerize) பதிவேற்றம் செய்து பராமரிக்கவும், மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் கீழ்க்கண்ட அவசரத் தேவைகள் நமக்கு ஏற்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | கணினி (கம்யூட்டர்) – இரண்டு (ஒவ்வொன்றிற்கும் விலை சுமார் ரூ. 55,000 வீதம்) | - 1,10,000 ரூபாய் |
| 2. | கணினிக்கான மென்பொருட்கள் (Software) | - 20,000 ரூபாய் |
| 3. | புத்தகங்களை முறைப்படி பதிவு செய்ய கட்டணம் | – 30,000 ரூபாய் |
| 4. | இதர செலவுகள் | – 10,000 ரூபாய் |
| | **மொத்தம்** | **1,70,000 ரூபாய்** |

இந்த அவசரத் தேவையை சந்திப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறோம். இதற்காக மிகுந்த பாரத்துடன் ஜெபியுங்கள்.



தேவன் உங்கள் இருதயத்தில் ஏவினால், இதில் ஏதாவது ஒரு தேவையையோ அல்லது ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ அனுப்பி உதவிட வேண்டுகிறோம். நாங்கள் ஊழியத் தேவைகளை உங்களிடம் திணிப்பது எங்கள் வழக்கம் அல்ல. ஆனால், நீங்கள் எங்கள் உடன் ஊழியர்களாக இருப்பதினால் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறோம். தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். தயவு செய்து ஜெபியுங்கள்.

நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

– ஆசிரியர்

**அஞ்சல்வழி இறையியல் கல்வி**
ஊழிய சான்றிதழ் பெற படியுங்கள்!
மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.
ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள்,
ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தகங்கள்
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858 மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in
மேலும் விவரங்களுக்கு : **தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

எடுத்துக்கொள்ளவில்லை. ஏனெனில், இயேசுவின் மீது அவர்களுக்கிருந்த அன்பு அவர்கள் கண்களையும், உள்ளத்தையும் மழுங்கச்செய்து விட்டது!

மரணத்திற்குக் குறிக்கப்பட்ட மனிதனை ஒரு மிருகத்தைவிட கேவலமாக நடத்துவார்கள். இவர்களை எவருமே பொருட்படுத்துவதில்லை. இவர்களுக்காகப் பரிந்து பேச எவருமே முன்வருவதில்லை. மாறாக வெறுப்பார்கள். சிலுவையில் அறைவதற்குமுன் ஆடை ஏதும் இல்லாத முதுகில் ஈவு, இரக்கமின்றி சாட்டையால் பலமுறை அடிப்பார்கள். சாட்டையின் நுனியில் உடைந்த எலும்புத் துண்டுகள் அல்லது தூண்டில் போன்ற இரும்புத் துண்டுகள் கட்டியிருப்பார்கள். ஒரே நேரத்தில் ஒன்று குறைய நாற்பது அடிகள் அடிப்பார்கள். இதனை மேலும் தொடர முடியும். இதனால், மரணத் தண்டனைக்குரியவரை குற்றுயிராக்கி விடுவார்கள்! எந்த குற்றமும் செய்யாத இயேசுவுக்கும் இந்தத் தண்டனை அளிக்கப்பட்டது! இயேசுவை விசாரித்த ரோம ஆளுநரான பிலாத்து என்பவர், “இவரில் நான் எந்த குற்றத்தையும் காணவில்லை” என்று அறிவித்தான். ஆனால், வேதபாரகர்களும், ஆசாரியர்களும், யூதர்களும் இயேசுவின் மரணத்திற்காக கொக்கரித்தார்கள். எப்படியும் இயேசுவுக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுக்கத் துடித்துக் கொண்டிருந்தனர். குற்றமில்லா இரத்தத்தை சிந்தச் செய்தார்கள். பலநூறு வருடங்களுக்கு முன் சங்கீதக்காரன் எழுதி வைத்துள்ளான், “**உழுகிறவர்கள் என் முதுகின்மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்**” (சங்கீதம் 129:3).

## இயேசு சிலுவையில் அறையப்பட்டார்!

ஒருவரை சிலுவையில் அறையப்படும் இடம் நகரத்திற்கு வெளியே இருக்கும். தண்டனைக்குரியவரை மரத்தினாலான சிலுவையை அந்த இடத்திற்கு நகரின் தெருக்கள் வழியாக சுமந்து செல்ல வைப்பார்கள். தண்டனைக்குரியவர் “செய்த” குற்றத்தை மற்றவர்களும் அறிவதற்கு ஒரு அட்டை அல்லது பலகையில் எழுதி கழுத்தில் தொங்கவிடுவார்கள். சிலுவையில் அறையும் ரோமச் சேவகர்கள் ஈவு, இரக்கமற்றவர்களாக இருப்பார்கள். மரணத்திற்குரியவர் சரீரத்தில் ஒரு சிறு துண்டு ஆடையை மட்டுமே அணிந்து கொள்ள அனுமதிப்பார்கள் (to cover the private part). இவர்கள் சரீரத்தை கடும் வெயிலுக்கும், பனிக்கும் விட்டுவிடுவார்கள். இவர்கள் பகலில் கொடிய வெயிலையும், இரவில் கடுமையான பனியையும் தாங்கிக்கொள்ளவேண்டும். வாரினால் அடிபட்ட இவர்கள் முதுகு இரத்தமெல்லாம் போய் உழுத நிலம் போல் ஆகிவிடும்!

சிலுவையில் அறையுமிடத்தில், அந்த சிலுவை மரத்தின் மீது படுக்க வைப்பார்கள். கைகளை இருபக்கமாக நீட்டவும், கால்கள் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து கயிறுகளால் கட்டிவிடுவர் அல்லது ஆணிகளால் கடாவப்படுவார்கள். இயேசுவின் கைகளும், கால்களும் நீண்ட ஆணிகளால் கடாவப்பட்டது! பின்பு சிலுவை மரம் அங்கு எடுக்கப்பட்டிருக்கும் குழியில் கயிறு வேலைகளால் சேவகர்களால் நிறுத்தப்பட்டு வானத்திற்கும், பூமிக்கும் இடையில் தொங்க விடுவார்கள். இயேசு ஒரு வெள்ளிக்கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டார். சனிக்கிழமை யூதர்களுக்கு பரிசுத்த நாளாகையால், அந்த நாளில் சரீரம் சிலுவையில் தொங்கக்கூடாது. சிலுவையில் அறையப்பட்டவர் வெள்ளிக்கிழமையே மரித்து விட்டால் அவர் கால்களும், கைகளும் முறிக்க அவசியம் ஏற்படாது. ஒருவர் ஜீவன் அன்றைக்கே போகாதிருந்தால், வெள்ளி மாலையில் அவர் கால்களும், கைகளும் முறிக்கப்பட்டு, வேதனையைப் பெருக்கி மரணத்தை துரிதப்படுத்துவார்கள்! வாரத்தின் தொடக்கத்தில் அறையப்படுகிறவர்களில் சிலர் பல நாட்கள் (சிலுவையில்) தொங்குவதும் உண்டு; இவர்கள் பசியாலும், வேதனையாலும் பைத்தியமாகி, சத்தமிட்டு கத்தி ஜீவனை விடுவார்கள்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட அன்றே (வெள்ளிக்கிழமை) ஆறாம் மணி நேரத்தில் ஜீவனை விட்டார். இயேசு இந்திய நேரப்படி ஒன்பதாம் மணி நேரத்தில் சிலுவையில் அறையப்பட்டு பாவம், சாபம், வியாதி நிறைந்த பாத்திரத்தை (cup of sin, curse and sickness) நண்பகல் 12 மணிக்கு குடித்தார். பின்பு பிற்பகல் மூன்றாம் மணி நேரத்தில் ஜீவனை விட்டார். இயேசு, வெள்ளியன்றே மரித்துவிட்டதால் அவர் எலும்புகள் ஏதும் முறிக்கப்படவில்லை. ஒரு சேவகன், இயேசு மரித்துப் போனதை உறுதி செய்யுமாறு அவனது ஈட்டியால் இயேசுவின் விலாவில் குத்தினான். இரத்தமும் நீரும் ஓடி வந்தது. இயேசு மொத்தம் ஆறு மணிநேரம் சிலுவையில் தொங்கினார்!

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கீழ்க்கண்ட ஏழு வார்த்தைகளைச் சொன்னார்.

1. பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது இருக்கிறார்களே (லூக்கா 23:34).
2. இயேசு அவனை நோக்கி: “இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்றார் (லூக்கா 23:43).
3. இயேசு தம்முடைய தாயை நோக்கி: “ஸ்திரீயே அதோ, உன் மகன்” என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி: “அதோ, உன் தாய்” என்றார் (யோவான் 19:26,27).
4. ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: “ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” என்று அர்த்தமாம் (மத்தேயு 27:46).
5. அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: “தாகமாயிருக்கி றேன்” என்றார் (யோவான் 19:28).

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகம முழு நேரக் கல்லூரி, சென்னை.
ECHO OF HIS CALL (ECHO GROUP)
போதனா மொழி : இந்தி
Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)
Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும்
போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.
Certificate in Theology : ஒரு வருடம்
கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2022 ஏப்ரல் 19 முதல் மே 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஏப்ரல் 19 ➲ ஏப்ரல் 17–ம் தேதி நடைபெற்ற உயிர்த்தெழுந்த ஞாயிறு (Easter Sunday) ஆராதனைகளை கர்த்தர் ஆசீர்வதித்து கொடுத்தார்.

ஏப்ரல் 20 ➲ சுவிசேஷம் சென்றடையாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்றடைய கர்த்தர் கிருபையாய் உதவி செய்தார்.

ஏப்ரல் 21 ➲ கடந்த மாதம் முழுவதும் நமது **அழைப்பின் எதிரொலி ஆலயங்களில்** நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

ஏப்ரல் 22 ➲ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 23 ➲ நமது தலைமைச்சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஏப்ரல் 24 ➲ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்துள்ளார்.

ஏப்ரல் 25 ➲ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளையும், விசுவாசிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஏப்ரல் 26 ➲ நமது ஊழியங்களை ஜெபங்களினாலும், பொருளாதாரங்களினாலும் ஆதரிப்பவர்களுக்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 27 ➲ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும் மற்றும் அவர்களது சமூகநிலைக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 28 ➲ நமது தலைமைச்சபையில் நடைபெறும் பெண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஏப்ரல் 29 ➲ நமது **ஹிந்தி இணையவழி வேதாகமக் கல்விமுறையை** ஆசீர்வதித்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 30 ➲ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றிற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மே 01 ➲ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மே 02 ➲ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மே 03 ➲ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தில் பணிபுரியும் ஊழியர்களை கொரோனா வைரஸிலிருந்து பாதுகாத்து வருகிறதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

மே 04 ➲ ரஷ்யாவிற்கும், உக்ரேனுக்கும் இடையே நடைபெறும் போருக்காக மற்றும் உலகமனைத்திற்கும் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

மே 05 ➲ இந்த மாதத்தின் **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க ஜெபிப்போம்.

மே 06 ➲ உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காக ஜெபிப்போம்.

மே 07 ➲ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் புதிய பெலனுக்காகவும் ஜெபிப்போம்.

மே 08 ➲ கர்த்தர் நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்கு** அர்ப்பணிப்புள்ள பணியாளர்களை கொடுக்க ஜெபிப்போம்.

மே 09 ➲ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க ஜெபிப்போம்.

மே 10 ➲ கொரோனா என்ற வைரஸ் உலகத்தை விட்டு நிர்மூலமாக ஜெபிப்போம்.

மே 11 ➲ ஊழிய பணித்தளங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

மே 12 ➲ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரர் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதான கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.

மே 13 ➲ கொரோனாவினால் தனக்கு அன்பானவர்களை இழந்து வாடும் மக்களுக்காக ஜெபிப்போம்.

மே 14 ➲ நமது ஆங்கில இணை ஆசிரியர் சகோதரர் எம். பால்ராஜ் அவருடைய பரிபூரண சுகத்திற்காக ஜெபிப்போம்.

மே 15 ➲ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட ஜெபிப்போம்.

மே 16 ➲ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட அர்ப்பணிப்புடன் ஜெபிப்போம்.

மே 17 ➲ நமது தலைமை மற்றும் கிளைச் சபைகளின் விசுவாசிகள், ஊழியர்கள் மற்றும் ஜெப வீரர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

மே 18 ➲ நநமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பம் மற்றும் குழுக்களை கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ஜெபிப்போம்.

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

6. இயேசு காடியை வாங்கினபின்பு, "முடிந்தது" என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக் கொடுத்தார் (யோவான் 19:30).
7. "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார் (லூக்கா 23:46).

## இயேசு தமது ஜீவனை எறிந்து விடவில்லை!

இயேசு பாவமறியாத அடிக்கப்படுகிற ஆட்டைப் போல் இந்த உலகத்தில் வந்தார்.

இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவத்தைப் போக்கமாட்டாதே! ஆகவே, இயேசு இந்த உலகத்தில் வந்தபோது:

**"அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.**

**ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்;**

**சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்.**

**அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்."**

(எபிரெயர் 10:4–7).

ஒரு பலியாக இயேசு மரிப்பது முன் குறிக்கப்பட்ட ஒன்று! வேதம் சொல்லுகிறது:

**"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"** (யோவான் 3:16). இயேசு தாமே சொன்னார்:

**"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்"**

(யோவான் 3:14,15).

## இயேசுவின் உயிர்த்தெழுதல்!

இயேசு சிலுவையில் ஒரு வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு (IST) ஜீவனை விட்டார். ஆனால், அவர் மூன்றாம் நாள் ஞாயிறு அதிகாலை உயிர்த்தெழுந்தார். மரணம் அவரை வைத்துக் கொள்ள முடியவில்லை. இயேசு சொன்னார்: **"மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கு முரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்"** (வெளிப்படுத்தின விசேஷம் 1:18).

இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்தெழுதலுக்கும் முன், மரித்த நீதிமான்கள் பாதாளத்தின் மேல் அறையில் இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள் (ஏசாயா 57:2). அதே சமயத்தில் மரித்த துன்மார்க்கர்களுடைய ஆத்துமா கந்தகமும் அக்கினியும் எரிகிற கீழ் அறையில் தள்ளப்பட்டார்கள். மரித்த பரிசுத்த வான்களுக்கு வேதனை ஏதும் இல்லையென்றாலும், கீழ் அறையில் உள்ளவர்கள் போடும் சத்தத்தையும் அடையும் வேதனையையும் பரிசுத்தவான்கள் பார்க்க நேரிட்டது. மரித்த இயேசுவின் ஆவி, பாதாளத்தின் மேல் அறையில் இளைப்பாறிக் கொண்டிருந்த பரிசுத்தவான்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து அவர்களை பரதீஷ் என்று அழைக்கப்படும் மூன்றாம் வானத்திற்கு அழைத்து வந்தார் (2 கொரிந்தியர் 12:2–4, எபேசியர் 4:8,9 மற்றும் சங்கீதம் 68:18). ஆபேல் முதல் யோவான் ஸ்நானன் வரையிலுமுள்ள மரித்த பரிசுத்தவான்களுக்கு அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் இயேசு அளித்தார். ஆதாமைப் பொறுத்தமட்டில் நாம் தீர்ப்பு சொல்ல முடியாது. இப்பூவுலகத்தின் முதல் மனிதனாக தேவனால் படைக்கப்பட்ட ஆதாம், கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைக்கப் பெறலாம்.

## இயேசு வேறொரு தேற்றரவாளனை அனுப்புதல்!

பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கும் இயேசு கிறிஸ்து பரிசுத்தாவியானவராகிய இன்னொரு தேற்றரவாளனை (Comforter), அப்போஸ்தலர் 2:1 இல் சொல்லப்பட்டுள்ளபடி இப்பூமிக்கு அனுப்பினார். இயேசு இப்போது மரித்தவர் அல்ல, அவர் என்றும் உயிரோடிருப்பவராகவே இருக்கிறார். தேவ ஜனங்கள் எதைக் குறித்தும் இந்த உலகத்தில் அதைரியமடைய வேண்டாம். **"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?"** (ரோமர் 8:32).

## பவுலின் அனுபவம் என்ன?

கர்த்தருடைய ஜனங்களுக்கெல்லாம் பவுல் ஒரு எதிர்ப்பாளர் (rebel); இவர் பென்னியமீன் கோத்திரத்தில் பிறந்தவர்; நியாயப்பிரமாணத்தை நன்கு கற்றுத் தேறியவர்; பரிசேயன்; நியாயப்பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவர். இவர் தமஸ்குப் பட்டணத்தில் உள்ள கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக பிரதான ஆசாரியனிடமிருந்து கடிதம் பெற்றுக்கொண்டு நண்பர்களுடன் அங்கு சென்று கொண்டிருக்கும்போது, பிரகாசிக்கிற ஒரு ஒளி இவர் மீது படவே, இவர் அந்த ஒளியால் கடுமையாகத் தாக்கப்பட்டு கீழே விழுந்தார்! அப்போது அவருக்கு கண்பார்வை அற்றுப்போயிற்று! அப்போது இயேசு அவனிடம் பேசியதாவது, "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" அதற்குப் பவுல், "ஆண்டவரே, நீர் யார்?" என்று கேட்க, அதற்கு கர்த்தர், "நான் இயேசு; உன்னால் துன்பப்படுத்தப்படுகிற இயேசு நானே! முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமே" என்றார்.


**நெகேமியா வேதாகம மாலை நேரக் கல்லூரி**

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : தமிழ்

ECHO OF HIS CALL 1969-2019 (ECHO GROUP)

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

**Certificate in Theology : ஒரு வருடம்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

கலக்கமடைந்து நடுங்கிக் கொண்டிருந்த பவுல், இயேசுவிடம், "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்றார். அதற்கு இயேசு, "நீ எழுந்து பட்டணத்திற்குப் போ, நீ என்ன செய்ய வேண்டுமென்பது அங்கு உனக்குச் சொல்லப்படும்" என்றார் (அப்போஸ்தலர் 9:4–6). அங்கு அனனியா என்ற கர்த்தரின் ஊழியக்காரர் பவுலிடம் வந்து, அவனுக்காக ஜெபித்தார். கர்த்தர் பவுலைக் கொண்டு ராஜாக்களுக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரம் என அனனியாவுக்கு கர்த்தர் சொன்னார். அனனியா ஜெபித்த பின், இவன் சில காலத்திற்குள் சுவிசேஷத்தை அறிவிக்கிறவனாகவும், இயேசுவுக்காக மரிக்கவும் தயாரானான். தம்முடைய சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் எல்லோரையும் அழைக்கிறார்! பவுல், தன்னுடைய இறுதி மூச்சு வரையிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்தான்.

## தனி மனிதன் என்ன செய்யலாம் ?

பவுல் தனது அனுபவத்தை இங்கு கூறுகிறான்: **"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; ..."** (கலாத்தியர் 2:20). சுருக்கமாகச் சொல்வோமென்றால், பவுல் கிறிஸ்துவுடன் மரித்தான், இப்போது அவனல்ல, கிறிஸ்துவே அவனில் பிழைத்திருக்கிறார்!

எல்லாரும் கர்த்தரிடமாய்ச் சேர வேண்டுமென்பதே தேவனின் சித்தமாயிருக்கிறது. கிறிஸ்துவிடம் வந்து, இரட்சிப்பு என்னும் பரிசைப் பெற்று, கிறிஸ்துவோடு வாழ்ந்து, தேவராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும். பவுல் நம் ஒவ்வொருவரையும் பார்த்து: **"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"** (ரோமர் 12:1).

மேலும், **"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோமர் 12:2) என்றார். நமக்குள்ளாக ஜீவிக்க, கர்த்தர் ஒவ்வொருவரின் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியத்தை எதிர்பார்க்கிறார். மத்திய ஆகாயத்தில் தேவ எக்காளம் தொனிக்கும் போது, ஒவ்வொருவரும் இமைப்பொழுது மறுரூபமாகி, வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவர். அங்கு மத்திய ஆகாயத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையால் ஒவ்வொருவரும் உயிர்த்தெழுதல் அடையப்பெற்று, கிறிஸ்துவால் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கு, சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பிதாவை தரிசிப்பார்கள் (சங்கீதம் 11:4).

## உலகம் எங்கே சென்று கொண்டிருக்கிறது ?

உலக மனிதர்களை சாத்தான் தனது பொல்லாத வழிகளைக் கைக்கொண்டு உலகத்தின் ஆசை இச்சைகளுக்கு நேராய் வழி நடத்துகிறான். இவர்கள் நாளடைவில் தங்கள் சமாதானத்தை இழந்து, பைத்தியக்காரர்களைப் போலாகி, சாத்தானின் உலகத்திற்கு நேராய் கொண்டுச் செல்லப்படுகிறார்கள். உலகம் சாத்தானின் காட்சிகளில் தழைத்துக் கிடக்கிறது. தங்களைச் சுற்றிலும் உள்ள மரணக் கண்ணிகளை இப்போது இவர்கள் அறியார்கள்! இவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு காது கொடுப்பதில்லை. சிலுவையின் உபதேசம் வெறுப்பிற்குரியதாக எண்ணித் தள்ளிவிடுகிறார்கள்.

இவர்கள் (உலக மனிதர்) தங்களுக்குரியவைகள் குறித்தும் உலகத்தைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். இவர்களுடைய அரண்மனை போன்ற வீடுகள், படகு போன்ற கார்கள், செல்வங்கள், வங்கியிலுள்ள சேமிப்பு, மனைவி, பிள்ளைகள் போன்றவை குறித்தே மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனால், இவர்களிடம் கிறிஸ்து இல்லை! கோவிட் 19 என்ற கொள்ளைநோய் கணப்பொழுதில் அநேகரை வாரிக்கொண்டு போய்விட்டது! ஜனங்கள் ஆக்சிஜன் உருளைக்காக (Oxygen Cylinders) தேடி அலைந்து திரிந்தார்கள். இது கிடைக்கப் பெறாததால் அநேகர் மரணத்தைச் சந்தித்து விட்டனர். சமீபத்தில் பல உலக நாடுகளில் மேகங்கள் வெடிப்பு (Cloud Burst) காரணத்தால் கனமழை பெய்து வாழ்க்கையை கடினமாக்கி விட்டது. சில ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய கனமழை ஏற்பட்டது. சீனாவில் ஆயிரம் வருடங்களில் இல்லாத கனமழை வெளுத்து வாங்கியது. மலைகள் சரிந்து விழுதல், எரிமலை வெடிப்பு, பூமி அதிர்ச்சி போன்றவை ஜனங்களின் வாழ்க்கையைக் கடினமாக்கி வருகிறது. இவ்வளவும் இருந்தும் மனிதன் தன்னைக் குறித்தப் பெருமையை விட்டு வெளியே வரவில்லை. வேதம் சொல்லுகிறது:

**"ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்;**

**மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"** (எரேமியா 9:23,24).

தேவனாகிய கர்த்தர் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிறார். தேவனே உன்னதமானவர்! வானத்திலும் பூமியிலும் வானங்களையும் பூமியையும் படைத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே உயர்ந்தவர். எனவே, பவுல் சொல்லுகிறார்:

**"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்"** (கலாத்தியர் 6:14).

உலகம் பரந்து விரிந்து கிடக்கிறது. ஆனால், அது பவுலைப் பொறுத்தமட்டில் சிலுவையில் அறையுண்டு கிடக்கிறது அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உலகத்திற்காக அவரும் கட்டப்பட்டவராயிருக்கிறார்! தேவ மனிதர் ஒருவர் கீழ்க்கண்ட பாடலை இயற்றிப் பாடியுள்ளார்:

பல்லவி

மேன்மை பாராட்டுவேன் நான்
மேன்மை பாராட்டுவேனே
இயேசுவின் அன்பினையே
மேன்மை பாராட்டுவேன் – என்

அனுபல்லவி

சிலுவை எந்தன் மேன்மை
சிலுவை எந்தன் அடைக்கலம்
ஸ்தோத்திரம் இயேசுவே ஸ்தோத்திரம்
சிலுவை நாதரே ஸ்தோத்திரம்

1. சிலுவையில் அறையுண்டேன் நான்
சிலுவையில் அறையுண்டேன்
இனி நான் அல்ல இயேசுவை என்னில்
என்றும் அவரைக் காட்டிடுவேன் – சிலுவை

2. சிலுவையைச் சுமந்திடுவேன் – நான்
சிலுவையைச் சுமந்திடுவேன்
இனி இயேசுவின் மகிமைக்காய் நானே
என்றும் பாடுகள் சகித்திடுவேன் – சிலுவை

நமது தேவனை திரியேக தேவன் என்று அழைக்கிறோம். அவர் ஆசீர்வாதத்தையும், பாதுகாப்பையும் தரும் **'கர்த்தருடைய தூதனானவர்'** என்கிறோம்! அவர் பராக்கிரமம் செய்யும் **கர்த்தராகவும்** எல்லாவற்றையும் நல்கும் **தேவனாகிய கர்த்தராகவும்** காண்கிறோம். ஆக, அவர் கர்த்தருடைய தூதனானவர், கர்த்தர், தேவனாகிய கர்த்தர் என வெளிப்படுகிறார். தேவன் ஒருவரே! அவரை அணுகுகிறவரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ப அவர் வெளிப்படுகிறார். இன்னுமொரு பரிமாணத்தி லும் கர்த்தர் (God) வெளிப்படுகிறார். **அநாதி தேவன்** (Eternal God) இவர் படைப்பிற்கு முன்பும், படைப்பின் போதும், படைப்பிற்கு பின்பும் இருக்கிறவராக வெளிப்படுகிறார்.

புனித பவுலடியார் கர்த்தரை மேலும் அறியவேண்டுமென்று விரும்புகிறார். இயேசு கர்த்தர் என்ற அடிப்படை அறிவை மட்டும் அறிவதில் அவர் திருப்தியடையவில்லை. இயேசு சொன்னார்: **"ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்"** (யோவான் 17:3).

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## தேவன் அளித்த நல்ல சூழ்நிலைகள்!


என் ஆரம்பப்பள்ளிப் படிப்பை அரசு கிராமப்பள்ளியில் முடித்த பின்னர் நான் ஓர் ஆவிக்குரிய பிள்ளையாக வளரவேண்டும் என்ற ஆசையுடன் என்னை நெய்யூர் என்னும் சிற்றூரில் உள்ள ஹாக்கர் மெமோரியல் அப்பர் பிரைமரி பள்ளி (Hacker Memorial Upper Primary




அரசுப் பள்ளி, கண்ணாட்டுவிளை



ஹாக்கர் மெமோரியல் அப்பர் பிரைமரி பள்ளி




அரசுப் பள்ளி, இரணியல்




இலட்சுமிபுரம் கல்லூரி

School) என்ற கிறிஸ்தவப் பள்ளியில் என் பெற்றோர் சேர்த்தனர். இப்பள்ளியில்தான் எனக்கு 6–ம் வகுப்பிலிருந்து ஆங்கில மொழி முதன்முதலில் பயிற்றுவிக்கப்பட்டது. அது என் இல்லத்திலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. தினமும் போய்வர சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் நடக்கும்படி என் பெற்றோர் என்னைப் பழக்குவித்தனர். அப்பள்ளி ஓர் சிறந்த கிறிஸ்தவப் பள்ளி. அங்குள்ள ஆசிரியர்களின் அன்பு, அறிவு, அர்ப்பணிப்பு, தியாகம் ஆகியவை என்னை வெகுவாய்க் கவர்ந்தன. பின்னர் பள்ளிப்படிப்பை இரணியல் அரசு உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிப் படிப்பை இலட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் பயின்று கொண்டேன்.



திரு. C. தேவதாஸ் (லேட்) அவர்கள் பணிஓய்வு பெற்ற நாளில் எடுக்கப்பட்ட புகைப்படம். (உட்கார்ந்த நிலையில் : 4வது நபர் இடமிருந்து வலமாக)

ஆசிரியர்கள் Rev. கேசரி ஐயர், பேராசிரியர் D.G. ஐசக், திருவாளர்கள் முத்தையா (தலைமை ஆசிரியர்), C. தேவதாஸ், சுந்தரராஜ் மற்றும் ஆசிரியைகள் திருமதி ஸ்டெல்லா ஹெப்சிபா செல்லப்பா, திருமதி B. அன்னபாய் மோசஸ், திருமதி J. சரோஜா தங்கவடிவு, திருமதி இதழ், திருமதி P. லிசி ஆகியோரது அர்ப்பணிப்பு என்னை ஓர் தெய்வ பயமுள்ள நல்ல மனநிலைக்கு மாற்றியது. எனக்கு சரீரத்தில் இருந்த சில பெலவீனங்களால் மிகவும் தாழ்வு மனப்பான்மையுடன் பிற மாணவர்களிடம் கலப்பதை தவிர்க்க முற்பட்டது உண்டு. என்னை ஊக்குவித்ததில் என் ஆசிரியைகளான திருமதி B. அன்னபாய் மோசஸ்,







திருமதி B. அன்னபாய் மோசஸ் , திருமதி ஸ்டெல்லா ஹெப்சிபா மற்றும் திருமதி J. சரோஜா தங்கவடிவு (இடமிருந்து வலமாக)


ஸ்டெல்லா ஹெப்சிபா செல்லப்பா, திருமதி J. சரோஜா தங்கவடிவு மற்றும் திருமதி . சுசீலி ஆகியோர் பெரும்பங்கு ஆற்றினர்.

ஆனால், பெலவீனமாயிருந்த என்மேல் என் ஆசிரியர்கள் பாராட்டிய அன்பும், பரிவும், தெய்வீக அன்பும் என்னை ஜீவனுள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மேல் வழிநடத்தின. அந்த நாட்களில் வாழ்க்கையில் நலிவுற்ற மக்கள்மேல் அன்புகூருதல் என்ற பண்பை அவர்கள் கற்றுக் கொடுத்தனர். அப்பள்ளியில் படிக்கும்போதுதான் வேதத்தில் உள்ளப் பல ஆழமான இரகசியங்களை ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தனர். சங்கீதங்கள் 1, 2, 23, 91, 121, 136, 1 கொரிந்தியர் அதிகாரம் 13, மத்தேயு அதிகாரங்கள் 5, 6, 7 ஆகியவற்றை அப்பள்ளியில் படிக்கும்போதுதான் மனப்பாடமாகக் கற்றுக்கொண்டேன். கடின உழைப்பு, உண்மை, நேர்மை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அங்குதான் கற்றுக் கொண்டேன். இவைதான் தற்போது செயின்ட்பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியை ஆரம்பித்து நடத்த உந்து விசையாய் மாறியது.

**அழைப்பின் எதிரொலி**

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி! – ஆசிரியர்



சகோ. இம்மானுவேல் மனோகரன்



(லேட்) சகோ. G. ஜெயானந்த பால்மணி

அப்போது என்னுடன் படித்த சகோ. இம்மானுவேல் மனோகரன், மறைதிரு. சாம் யேசுதாஸ், சகோ. சார்லஸ் பெர்ன் பெண்ட்லி, சகோ. ஹம்ப்ரி வினிஸ்டர், சகோ. தங்கறசல், சகோ. ஹாரிசன் பெஸ்டஸ் ஜோயல், சகோ. ரவி தேவதனம், சகோ. D.D. ராஜன், சகோ. ஆட்சன் மோகன், மறைதிரு. முனைவர் A.செல்வராஜ் மற்றும் சகோ. G. ஜெயானந்த பால்மணி ஆகியோர் ஆவிக்குரிய நண்பர்களாக இருந்தனர். அவர்களும் இப்போது பற்பல தேவ ஊழியங்களில் முன்னணியில் நின்று செயல்படுகின்றனர். ஆனால் இவர்களில் சகோ. ஹாரிசன் பெஸ்டஸ் ஜோயல் மற்றும் சகோ. G. ஜெயானந்த பால்மணி ஆகிய இருவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டனர்.

இப்படியாக நான் ஊழியக்காரனாக உருவெடுக்க என்னுடைய சூழ்நிலைகளை தேவன் மிகவும் நேர்த்தியாகவும், சாதகமாகவும் படிப்படியாக மாற்றி, நான் தேவ ஊழியத்தின் ரசனையையும், ஆழமான ஆவிக்குரிய அழுத்தத்தையும் உணரும்படி செய்தார். ■ ■ ■

... 7-ம் பக்கத் தொடர்ச்சி

கர்த்தரை அறியும் அறிவின் மேன்மைக்காக பவுல், தனது முன்னோர்களின் மேன்மை, செல்வம், நியாயப்பிரமாணத்தை அறியும் அறிவு, ரோமக்குடியுரிமை யாவற்றையும் நஷ்டமென்று கருதுகிறேன் என்று கூறுகிறார். இயேசுவை அறிந்திட, தனக்குரிய எல்லாவற்றையும் குப்பையென அறிக்கை செய்கிறார். தான் உயிரோடெழும்பத் தகுதி யாகும்படிக்கு எல்லாவற்றையும் விட்டுவிட பவுல் ஆயத்தமாகி விட்டார். **"இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும் படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்"** (பிலிப்பியர் 3:10,11).

தந்தை பெர்க்மான்ஸ் இவ்விதமாகப் பாடியுள்ளார்:

இராஜா உம் பிரசன்னம் போதுமையா
எப்போதும் எனக்குப் போதுமையா
பிரசன்னம் பிரசன்னம் தேவப் பிரசன்னம்.
அதிகாலமேத் தேடுகிறேன்
ஆர்வமுடன் நாடுகிறேன்
உலகமெல்லாம் மாயையய்யா
உம் அன்பொன்றேப் போதுமையா.
இன்னும் உம்மை அறியணுமே
இன்னும் கிட்டிச் சேரணுமே!

## இயேசு அழைக்கிறார்!

இயேசுவின் அழைப்பு, யூத மக்களாகிய யூதர்களுக்கு மட்டுமல்ல; தேசம், இனம், மொழி பாகுபாடின்றி அனைத்து மக்களுக்குமானது; இயேசு கூறுகிறார்: **"நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களை கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்"** (வெளிப்படுத்தின விசேஷம் 3:19,20).

வேதம் சொல்லுகிறது: **"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்"** (1 யோவான் 2:2).

இந்த உலகம் இரட்சிப்படைவதற்காக இயேசு சிலுவையை அணைத்துக் கொண்டார்! ஆதாம் முதல் யோவான் ஸ்நானன் வரையுள்ள மக்கள் பெருக்கத்திலிருந்தும் (முதல் பாகம்) இயேசு கிறிஸ்து இரட்சகராய் வெளிப்பட்டபின் கிருபையின் காலத்தில் அவர் இரத்தத்தால் மீட்கப்பட்ட / படும் மக்களாலும் (இரண்டாம் பாகம்) தம்முடைய இராஜ்யத்தை நிரப்ப வேண்டுமென்று தேவனாகிய கர்த்தர் விரும்பினார். ஆனால் முதற்பாகம் எதிர்பார்த்தபடி இல்லை. மேலும், இன்னொரு பாகமாக (contingent) இஸ்ரவேலின் 12 கோத்திரங்களிலிருந்தும் தேவதூதர்களால் நெற்றியில் முத்திரைபோட்டு தேர்வு செய்யப்படும் மக்களால், ஆயிரம் வருட அரசாட்சியில் பலுகிப் பெருகச் செய்து அவர்களைக் கொண்டும் தம்முடைய இராஜ்யத்தை (Kingdom) நிரப்ப கர்த்தர் சித்தங்கொண்டுள்ளார்.

சிலுவையிலிருந்து கிருபையும் இரக்கமும் இன்று பாய்ந்து வருகிறது. முற்காலத்தில் நமது முன்னோர், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டியிலிருந்து கிருபையைப் பெற திரைச்சீலை வழியாக கிருபாசனத்தைப் பார்த்தார்கள்!

இப்போதோ இயேசுவின் சிலுவையிலிருந்து கிருபையையும் இரக்கத்தையும் நேரடியாகப் பெறுகிறோம்! சிலுவையைத் தரிசித்து இரட்சிப்படையும் ஜனங்கள் கிறிஸ்துவுக்காக மரித்து அவருக்காக பிழைத்திருக்கிறார்கள்! பிழைத்தி ருப்பவர்கள் கிறிஸ்துவுக்காகப் பிழைத்து தேவ ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ள தகுதிப் படுத்திக் கொள்கிறார்கள்.

## சீஷர்களுக்கான அழைப்பு!

சீஷர்களுக்கான அழைப்பு வேறு, விசுவாசிகளுக்கான அழைப்பு வேறு. சீஷர்களுக்கான அழைப்பிற்கு கூடுதலான பாடுகளும், அர்ப்பணிப்பும் அவசியமாகிறது. எல்லோரும் தங்களை வெறுத்து குடும்பத்தையும் தகப்பன் வீட்டையும் விட்டு விடுதல் அவ்வளவு எளிதல்ல. ஆனால், அவ்வாறு அனைத்தையும் வெறுத்து விடுதல் பெரிய அர்ப்பணிப்பாகிறது! இவர்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளிலே கூடுதல் கன மகிமை அருளப்படும்! இவ்வாறு பெரிய அழைப்பைப் பெற்றவர்கள் அப்போஸ்தலர் ஆகும் தகுதியை யும் பெறுவார்கள். இந்நாட்களில் ஏராளமானோர் தங்களைத் தாங்களே அப்போஸ்தலர் என அழைத்துக்கொள்கிறார்கள்! இவர்கள் இந்த உயரிய அர்ப்பணிப்பிற்கான ஆதாரங்களோ, சபைகள் நிறுவினத்திற்கான அத்தாட்சியோ இல்லாமலே இருக்கிறார்கள்.

இயேசு சொன்னார்: **"ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்"** (மாற்கு 8:34). பேதுரு இயேசுவை நோக்கி, "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே," என்று சொல்லத்தொடங்கினான். அதற்கு இயேசு, **"... என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினி மித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையா வது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக வீடு களையும் சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களை யும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்றார் (மாற்கு 10:28–30).

கர்த்தருக்குக் கொடுக்கிறவர்கள் ஒருபோதும் தரித்திரராவதில்லை! இயேசு மேலும் பேதுருவை நோக்கி: **"...மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றி ருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை யும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்றார் (மத்தேயு 19:28).

சிலுவையைப் பின்பற்றுகிறவர் களுக்கு இத்தனை ஆசீர்வாதங்களை கர்த்தர் வைத்திருக்கிறார். ஆனால், சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாக இருக்கிறது. இவர்கள் சாத்தானின் வலையில் சிக்கிக்கொண்டு அழிவிற்கு நேராய் தீவிரிக்கிறார்கள். கிறிஸ்துவின் அன்பை ருசித்த ஒவ்வொரு கிறிஸ்தவனும், அழிவிற்கு நேராய்ச் செல்லும்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

மக்களை கிறிஸ்துவின் அன்பிற்குள் இழுத்துக் கொள்ள பாடுபடவேண்டும். இதனால், இவர்களும் தங்கள் அநேக பாவங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வார்கள். இந்நாட்களில் ஆயிரமாயிரம் பேர் கிறிஸ்துவின் அன்பிற்குள் அனுதினமும் கடந்து வந்து, சிலுவையின் மேன்மையைக் கண்டு கொண்டு தேவராஜ்யத்திற்குத் தங்களைத் தகுதிபடுத்திக் கொள்கிறார்கள். “நமக்கோ, சிலுவையைப் பற்றிய உபதேசம் தேவபெலனாக இருக்கிறது!”

★★★

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | S. Sam Selva Raj |
| A/C No. | : | 1023 2934 679 |
| IFSC | : | SBIN 00 00 249 |
| SWIFT CODE | : | SBI NIN BB 455 |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | Anna Salai, Chennai-6 |
| Name | : | Echo of His Call |
| A/C No. | : | 6038 0502 2319 |
| IFSC | : | ICIC 000 6038 |

### *3. Bank : State Bank of India*

(This Account is for Tax Exemption for Indians only )

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | Echo of His Call Educational Trust |
| A/C No. | : | 1023 2923 805 |
| IFSC | : | SBIN 00 00 249 |

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❊ வருட சந்தா ரூ. 100/– ❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc. மூலம் Echo of His Call என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in
Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com

**YOU CAN SEND YOUR DONATIONS ON ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th MARCH 2022
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**